| O.S.No. 436/2023 | PW1: திருமதி. உமா த/பெ. திரு. துரைராஜ் | 27-01-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. நான் +2 படித்துள்ளேன். நான் சூப்பர் மார்க்கெட் நடத்தி வருகிறேன். நான் துரைாராஜின் 2–வது மனைவி ஆவேன். துரைராஜின் முதல் மனைவிதான் ஆசிரியராக வேலை செய்கிறார். சூப்பர் மார்க்கெட்டை நான்தான் நடத்தி வருகிறேன். அதன் பெயர் S.M. சூப்பர் மார்க்கெட், அதைத் தவிர வேறு வேலை செய்யவில்லை. S.M. சூப்பர் மார்க்கெட்டினை 2020–ம் ஆண்டு முதல் நடத்தி வருகிறேன். எனக்கு 1 மாதம் எவ்வளவு வருமானம் வரும் என்றால், ஒரு சில மாதம் குறைவாகவும், ஒரு சில மாதம் அதிகமாகவும் வரும், எவ்வளவு என்று தெரியவில்லை.

2. நான் கடை பெயரில் ICICI வங்கியில் loan பெற்றுள்ளீர்களா என்றால் இல்லை. எங்களது கடைக்கு வருடத்திற்கு ஒருமுறை வருமான வரி காட்டுகிறோம். 2022 மற்றும் 2025–ம் ஆண்டு எவ்வளவு வருமானம் வந்தது என்றால், ஆவணங்களை பார்த்தால்தான் தெரியும். எங்களது கடையில் ஒவ்வொரு மாதமும் GST கணக்கு பார்ப்போம் என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆண்டுகளில் வருமான வரி கணக்கையும், GST கணக்கையும் பார்த்தால் எவ்வளவு வருமானம் வந்தது என்ற விஷயம் தெரியவரும் என்றால் சரிதான்.

3. நான் தற்போது வருமான வரி செலுத்தி வருகிறேன். கடை என்னுடைய பெயரில் உள்ளதால் கடை ஆரம்பித்ததிலிருந்து எனது பெயரில் வருமான வரி செலுத்தி வருகிறேன். வருமான வரி கணக்கு பற்றிய ஆவணத்தை பார்த்தால் நான் 2022–ம் ஆண்டு முதல் 2025–ம் ஆண்டு வரை நான் எவ்வளவு கடன் வாங்கியுள்ளேன், எவ்வளவு

செலுத்தியுள்ளேன், எவ்வளவு கடன் கொடுத்துள்ளேன், அந்த கடனுக்கு எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டது போன்ற விஷயங்கள் தெரியவரும் என்றால் சரிதான். பணம் ரூ.20,000/-த்திற்கு மேல் கொடுக்கும்போது Online மூலமாகத்தான் கொடுக்க வேண்டும் என்ற விஷயம் எனக்கு நன்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். பிரதிவாதி எனது கணவரின் நண்பர்.

4. நானும் எனது கணவரும் நடத்தி வரும் JD பைனான்ஸில் பிரதிவாதியின் கணவர் கடன் வாங்கினார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. அந்த பைனான்ஸ் நிறுவனம் பதிவு பெற்ற நிறுவனம் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அந்த பைனான்ஸ் நிறுவனம் எனது பெயரிலும், என் கணவர் பெயரிலும் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எனது கணவருக்கு என்ன வருமானம் என்றால் அவர் துணிக்கடை நடத்தி வருகிறார். அதில், என் கணவருக்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்கிற விஷயம் எனக்கு தெரியாது. எனது கணவரின் வருமானம் பற்றிய விஷயம் அவரது வருமான வரி கணக்கினை பார்த்தால் தெரியவரும் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது.

5. எனது கணவர் ரேணுகாவின் கணவருக்கு எதிராக 2 காசோலை மோசடி வழக்குகளை தாக்கல் செய்துள்ள விஷயம் தெரியுமா என்றால் தெரியும், நான் பணம் கொடுத்ததற்கு பிறகுதான் காசோலையில் உள்ள பணத்தினை என் கணவர் கொடுத்தார். ரேணுகா என்பவர் இதற்கு முன்பாக என்னிடம் எந்த கடனும் வாங்கவில்லை என்றால் சரிதான். கடன் கொடுப்பதற்கு முன்பாக பிரதிவாதி எனக்கு அறிமுகம் இல்லை, கடன் கொடுத்தபோதுதான் அறிமுகமானார். பிரதிவாதியின் கணவர் எனக்கு அறிமுகம் இல்லாதவர் என்றால் சரியல்ல, அறிமுகமானவர்தான், அவர்

எங்கள் கடைக்கு வரும் வகையில் 2020-ம் ஆண்டிலிருந்து தெரியும். ஏற்கனவே அறிமுகம் இல்லாதவர் மற்றும் கொடுக்கல் வாங்கல் இல்லாதவருக்கு பணம் தரமாட்டார்கள் என்று சொன்னால் சரிதான், பிரதிவாதி அசல் கிரைய பத்திரத்தை தருகிறேன் அவசரமாக பணம் வேண்டும் என்று சொன்னதால் கொடுத்தேன்.

6. பணம் கொடுக்கும் தேதிக்கு முன்னர் நான் பிரதிவாதியை பார்த்ததில்லை என்று சொன்னால் சரிதான். பிரதிவாதி முதல் முதலாக 2022-ம் ஆண்டு 9-ம் மாதம் என்னிடம் கடன் கேட்டார். பணம் கொடுத்ததாக சொல்லும் தேதிக்கு முன்பு வரை நான் பிரதிவாதியை பார்க்கவே இல்லை என்றாலும், வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல, பிரதிவாதியின் கணவர் கடன் கேட்டார். ரூ.20,000/-த்திற்கும் மேல் பணம் கொடுக்க வேண்டும் என்றால் Online மூலமாகத்தான் கொடுக்க வேண்டும் என்ற விஷயம் எனக்கு நன்கு தெரிந்து ரூ.4 லட்சம் பிரதிவாதிக்கு கொடுத்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. நான் வைத்திருக்கும் சூப்பர் மார்க்கெட்டுக்கு அருகேதான் என் கணவர் வைத்துள்ள துணிக்கடை உள்ளது என்றாலும், அதில்தான் பைனான்ஸ் நிறுவனமும் உள்ளது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் என் கணவரும், நானும், நடத்தி வரும் பைனான்ஸில் பிரதிவாதியின் கணவர் வாங்கிய கடனிற்கு பொறுப்பிற்காக கொடுக்கப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியின் கணவர் பைனான்ஸ் நிறுவனத்தில் பொறுப்பிற்காக கொடுத்த ஆவணங்களை தவறாக பயன்படுத்தி இந்த வழக்கினையும், காசோலை மோசடி வழக்கினையும் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

8. நான் பிரதிவாதியை பார்த்ததில்லை என்றாலும், பைனான்ஸிற்குத்தான் பிரதிவாதி வந்துள்ளார் என்றாலும் சரியல்ல. நான் பிரதிவாதியை சந்தித்து இதுவரையில் கடனை கேட்டதில்லை என்று சொன்னால் சரியல்ல, நான் சென்றேன். பிரதிவாதியை எங்கு சந்தித்து கேட்டீர்கள் என்றால் பிரதிவாதியின் வீடு பூட்டியிருந்தது, அங்கிருந்தவர்களிடம் சொல்லிவிட்டு வந்துவிட்டேன்.

9. பிரதிவாதி என்ன வேலை செய்கிறார் என்று எனக்கு தெரியாது. பிரதிவாதிக்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் அவர் அவரது கணவர் விவசாயம் செய்து கொண்டும், டிராக்டர் மூலமும் வருமானம் ஈட்டுவதாகவும், அதனால் திருப்பி கொடுக்கிறேன் என்று சொன்னார். நான் எனது வழக்கிலும், அறிவிப்பிலும், பிரதிவாதி வீட்டில் போய் பார்த்தபோது வீடு பூட்டியிருந்தது அவரை நான் பார்த்ததே இல்லை என்று சங்கதிகளை சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

10. நான் கடன் கொடுத்ததாக சொல்லியுள்ள சங்கதிகள் என் கணவருக்கு தெரியும். நான் கொடுத்ததாக சொல்லும் கடனை பிரதிவாதி கொடுக்காத நிலையில் என் கணவர் பிரதிவாதியின் கணவருக்கு பணம் கொடுக்க வாய்ப்பில்லை என்றாலும், நானும், எனது கணவரும் பைனான்ஸில் வைத்த ஆவணங்களை மோசடியாக கொண்டு பிரதிவாதியிடமும், அவரது கணவரிடமும் பணம் பறிக்க வேண்டும் என்கின்ற நோக்கத்தில் இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி என்ன பதில் வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்று எனக்கு தெரியாது. எனது கணவர் கந்துவட்டி மூலம் நிறைய பேருக்கு

பணம் கொடுத்து கந்து வட்டி தொழில் செய்கிறார் என்றாலும், அதற்கு நான் உடந்தையாக செயல்படுகிறேன் என்றாலும் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு ரூ.4 லட்சம் கொடுத்ததாக சொல்வது பொய் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 பாண்டிற்கும், பிரதிவாதிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்ன அறிவிப்பு அனுப்பினீர்கள் என்றால் பணத்தை கேட்டு அறிவிப்பு அனுப்பினேன். அந்த அறிவிப்பினை பிரதிவாதி பெற்றுக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல. எனது வருமான வரி கணக்கினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளீர்களா என்றால் தயாராக உள்ளேன்.

11. செல்வம் எனது கடையில் வேலை செய்பவர். மலர்விழி என்பவர் எனது பக்கத்து வீட்டை சேர்ந்தவர். மலர்விழி சமாதியான்குளத்தெருவில் இருக்கிறார். மலர்விழி, செல்வம் இருவருக்கும், பிரதிவாதிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரிதான். சரண்யா என்பவர் எங்கு வேலை செய்கிறார், என்ன ஊரை சேர்ந்தவர், அவர் யார் என்பது எனக்கு தெரியாது. மலர்விழி, செல்வம் ஆகியோர் பிரதிவாதியை பார்த்ததில்லை என்று சொன்னால் சரியல்ல, பணம் கொடுக்கும்போதும், பாண்டு எழுதிக்கொடுக்கும்போதும் அவர்கள் பிரதிவாதியை பார்த்தார்கள். தாவா பாண்டில் உள்ள சங்கதிக்கும், சாட்சியாக உள்ள நபர்களுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

12. பாண்டில் உள்ள சங்கதிகளை யார் எழுதியது என்றால் பிரதிவாதி அழைத்து வந்தவர்தான் எழுதினார். பாண்டில் உள்ள சங்கதி எழுதப்பட்ட மையும், கையெழுத்து போட்ட மையும் வெவ்வேறாக உள்ளது என்றால் சரியல்ல, ஒன்றாகத்தான் உள்ளது. பிரதிவாதியை அவரது

சொந்த ஊரில் போய் பார்த்தேன். நான் வழக்கில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய் என்றாலும், என்னுடைய வழக்கு பிரதிவாதியின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.01.27 13:09:56 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**